# <u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்ககிரி</u>

**அசல் வழக்கு எண் 243/2004**

பெயர்: **பொன்னுசாமி** நாள்: 23.11.2023

பி.வா.சா.2 – வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி

பி.வா.சா.2 – பொன்னுசாமி - சத்திய பிரமாணத்தின் பேரில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

<u>குறுக்கு விசாரணை தொடக்க நேரம் 01.00</u>

என்னை இவ்வழக்கில் தரப்பினராக சேர்க்கக் கோரி மனு தாக்கல் செய்தபோது மலையடி முனியப்பன் கோவில் சார்பாக அதன் தர்மகர்த்தா என்ற முறையில் மேற்படி வழக்கை நடத்த பிரதிநிதிதுவ அடிப்படையில் அனுமதி கோரி மனு தாக்கல் செய்தேனா என்றால், இல்லை. அவ்வாறு பிரதிநிதிதுவ அடிப்படையில் வழக்கில் எதிர் வழக்காட மனு தாக்கல் செய்து அனுமதி பெறாத நிலையில், கோவில் சார்பாக எதிர் வழக்காட எனக்கு சட்டப்படி உரிமையில்லை என்று சொன்னால், சரியல்ல. நான் 6ம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் விவசாய தொழில் செய்து வருகிறேன். எனக்கு பூர்வீக நிலம் அரசிராமணி பிட்-2 கிராமம், எல்லபாளையத்தில் உள்ளது. எனது தகப்பனார் பெயர் பெருமாள் ஆகும். எனது தகப்பனாருடன் உடன்பிறந்தவர் ஒரு ஆண் மற்றும் 3 பெண்கள் ஆவார்கள். எனது தகப்பனாரின் சகோதரர் பெயர் பழனியப்பன் ஆகும். பழனியப்பனுக்கு வளத்தியான்(எ) நல்லமுத்து, சின்னப்பன்(எ) ராமசாமி என இரண்டு மகன்கள் ஆவார்கள். எனது தகப்பனாருக்கு நானும், எனது சகோதரி அங்காயி வாரிசுகள் ஆவோம். எனது தகப்பனாருடன் பிறந்தவர்கள் ராமாயி, நாகம்மாள் மற்றொரு சகோதரி சிறுவயதில் இறந்துவிட்டால் அவர் பெயர் ஞாபகமில்லை.

2) எனது அத்தை ராமாயிக்கு பூங்கோதை, செல்லம்மாள், நல்லம்மாள் என 3 பெண் வாரிசுகள் உள்ளார்கள். எங்களுடைய பூர்வீக சொத்தை பாகம் பிரித்துக் கொண்டோம். எழுத்துமூலமாக பிரித்துக் கொண்டோம், அதன் வருடம் தற்போது ஞாபகமில்லை. வழக்கு சொத்து சர்வே எண் 899/3க்கு மேற்குபுறத்தில்தான் என்னுடைய பூர்வீக நிலம் உள்ளது, சரிதான். அந்த நிலம் என்னுடைய சித்தப்பா மகன்களுக்கு பிரித்தளிக்கப்பட்டுள்ளது. என்னுடைய சித்தப்பா மகன்களான

வளத்தியான்(எ)நல்லமுத்து, சின்னப்பன்(எ) ராமசாமி ஆகியோர்கள் காலம் சென்ற ரத்தினசாமி தாக்கல் செய்திருந்த இந்நீதிமன்ற அசல் வழக்கு எண் 332/1995 வழக்கில் பிரதிவாதிகள் என்றால், சரிதான். ரத்தினசாமி வழக்கு தாக்கல் செய்தபோதே என்னுடைய சித்தப்பா மகன்கள்மீது வழக்கு தாக்கல் செய்துள்ள விபரம் எனக்கு தெரியும்.

3) நான் தாக்கல் செய்துள்ள எதிர் வழக்குரையிலோ, முதன்மை சாட்சியத்திலோ அசல் வழக்கு எண் 332/1995 வழக்கின் பிரதிவாதிகள் என்னுடைய சித்தப்பா மகன்கள் என்றும், பங்காளிகள் என்றும் குறிப்பிட்டு கூறியுள்ளேனா என்றால், இல்லை. என்னுடைய சித்தப்பா மகன்களும் எல்லபாளையத்தில்தான் குடியிருக்கிறார்கள். எல்லபாளையத்தில் சுமார் 100 வீடுகள் உள்ளது. நானும் எல்லபாளையத்தில்தான் வசிக்கிறேன். எல்லபாளையத்தில் உள்ள எங்கள் சமூகத்தினர் ஏதாவது ஒரு வகையில் உறவினர்களாக உள்ளார்கள் என்றால், பாதி உறவினர்கள் உள்ளார்கள். அவர்களுக்குள் நடக்கும் வழக்கு குறித்த விபரங்களை தெரிந்து கொள்ள வாய்ப்புகள் உள்ளது என்று சொன்னால், சரிதான். அசல் வழக்கு எண் 332/1995 வழக்கில் வாதியான ரத்தினசாமி இறந்த பின்பு, இந்த வழக்கின் வாதி நல்லமுத்து, மேற்படி ரத்தினசாமி எழுதி வைத்த வா.சா.ஆ.1 உயிலின் அடிப்படையில் உயில் வாரிசு என்று 2 ம் வாதியாக சேர்க்கப்பட்டார் என்றால், அதுபற்றி எனக்கு தெரியாது.

4) அசல் வழக்கு எண் 332/1995 குறித்த விபரங்கள் எனக்கு 2006 ம் ஆண்டில்தான் தெரிய வந்தது. அசல் வழக்கு எண் 332/1995 ல் நல்லமுத்துவிற்கு ஆதரவாக ஒருதலை உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்ற விபரம், 2006 ம் ஆண்டு இந்த வழக்கில் ஆஜரானதற்கு பின்னிட்டு எனக்கு தெரியும். அந்த வழக்கு குறித்த விபரத்தை எனது வழக்கறிஞர் மூலமாகத்தான் தெரிந்து கொண்டேன். அசல் வழக்கு எண் 332/1995 ல் வழங்கப்பட்ட தீர்ப்பாணையை ரத்து செய்வதற்காக, அதனுடைய பிரதிவாதிகள் இன்றைய தேதி வரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று சொன்னால், சரிதான். அசல் வழக்கு எண் 332/1995 ல் வழங்கப்பட்ட தீர்ப்பாணை செல்லாது என்று நான் ஏதேனும் வழக்கு நடவடிக்கை எடுத்தேனா என்றால், இல்லை. எனது சித்தப்பா மகன் வளத்தியான்(எ) நல்லமுத்துவின் மனைவி பெயர் லட்சுமி(எ) குஞ்சுபிள்ளை என்றால், சரிதான். லட்சுமி(எ) குஞ்சுபிள்ளையின் தகப்பனார் பெயர்

பெருமாள் என்றால், சரிதான். லட்சுமி(எ) குஞ்சுபிள்ளையின் சகோதரர்கள் சதாசிவம், சித்தன் என்று சொன்னால், அதுபற்றி எனக்கு தெரியாது. எனது அத்தை ராமாயி மகள்களை லட்சுமி(எ) குஞ்சுபிள்ளையின் சகோதரர்களுக்குதான் திருமணம் செய்து கொடுத்துள்ளார்கள் என்று சொன்னால், சரியல்ல. எனது அத்தை ராமாயின் மகள்களான பூங்கோதையை எல்லபாளையத்தைச் சார்ந்த சதாசிவம் என்பவருக்கும், மற்றொரு மகளான செல்லம்மாளை சித்தன் என்பவருக்கும் திருமணம் செய்து கொடுத்துள்ளார்கள்.

5) மேற்படி சதாசிவம்., சித்தன் மற்றும் லட்சுமி(எ) குஞ்சுபிள்ளையின் தகப்பனார்தான் பெருமாள் என்று சொன்னால், சரியல்ல. மேற்படி நபர்களின் தகப்பனார் பெயர் கௌரிசுந்தரம் ஆகும். சதாசிவம், சித்தன் மற்றும் லட்சுமி(எ) குஞ்சுபிள்ளை ஆகியோர்கள் சகோதர சகோதரி என்றாலும், அதை மறைத்து அவருடைய தகப்பனார் பெயர் வேறு என்று பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னாலும், சரியல்ல. அசல் வழக்கு எண் 332/1995 ன் பிரதிவாதிகளுடன் கூட்டு சேர்ந்துகொண்டுதான் அந்த வழக்கில் வழங்கப்பட்ட தீர்ப்பாணையை எவ்வகையிலாவது முறியடிக்கவேண்டும் என்பதற்காகதான் இந்த வழக்கில் எதிர் வழக்காடுகிறேன் என்று சொன்னால், சரியல்ல. அதனால்தான் பிரதிவாதிகள் நெருங்கிய உறவினர்கள் என்ற விபரத்தை மறைத்துதான் மனு தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால், சரியல்ல.

6) மலையடி முனியப்பன் கோவிலை அருள்மிகு பெரியமகாமுனி சுவாமி என்றும் அழைப்பார்கள். திறந்த வெளியில் இருந்த சுவாமிக்கு ரத்தினசாமியும், வாதி நல்லமுத்துவும் முன்னின்று வரி வசூல் செய்து கோவிலை கட்டினார்கள் என்று சொன்னால், சரியல்ல. ரத்தினசாமி முன்னின்று கோவிலை கட்டினார். வேறு நபர்கள் யார் முன்னின்று செய்தார்கள் என்றால், தர்மலிங்கம், துரைசாமி மற்றும் 4 அல்லது 5 நபர்கள் சேர்ந்து கோவிலை கட்டினார்கள். முன்னின்று நடத்திய நபர்களின் பெயர்கள் கோவில் கல்வெட்டில் உள்ளது. என்னிடம் காட்டப்படும் ஆவணம் கோவிலில் உள்ள கல்வெட்டு குறித்த புகைப்படம் என்றால், சரிதான். அந்த கல்வெட்டுகளுக்கான புகைப்படம்-2 மற்றும் குறுந்தகடு, ரசீது ஆகியவைகள் **வா.சா.ஆ.15** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

7) வா.சா.ஆ.15 ஆவணத்தில் நல்லமுத்து த/பெ. அங்கமுத்து என்பது வாதி என்றால், சரிதான். மேற்படி மலையடி முனியப்பன் கோவிலின் திருப்பணிக்காகவோ, கும்பாபிஷேகத்திற்காகவோ எனது குடும்பத்தினரோ, நானோ முன்னின்று செய்ததற்கான ஆவணங்கள் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால், இல்லை. நானோ எனது குடும்பத்தினரோ கோவில் திருப்பணிகளை முன்னின்று செய்யாத காரணத்தினால்தான் அதற்கான ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால், சரியல்ல. வாதி, ரத்தினசாமிநாடாருடன் சேர்ந்து கோவில் திருப்பணிகளை முன்னின்று நடத்தி வந்தார் என்றாலும், நான் வழக்கிற்காக வாதி கோவில் பணிகளை செய்யவில்லை என்று பொய்யாக கூறியுள்ளேன் என்று சொன்னால், சரியல்ல.

8) இந்நீதிமன்ற அசல் வழக்கு எண் 125/2008 வழக்கு குறித்த விபரம் எப்பொழுது தெரிய வந்தது என்றால், 2008 ஆண்டு வாக்கில் தெரிய வந்தது, தேதி சரியாக ஞாபகமில்லை. எவ்வகையில் மேற்படி வழக்கு குறித்த விபரம் தெரியும் என்றால், சண்முகம் சொல்லிதான் விபரம் தெரியும். அசல் வழக்கு எண் 125/2008 ன் வாதிகள் எனக்கு உறவுக்காரர்கள் மற்றும் பங்காளிகள் ஆவார்கள். பி.வா.சா.ஆ.6 மற்றும் 14 ஆவணங்களை யார், எப்போது என்னிடம் கொடுத்தார்கள் என்றால், சண்முகம் என்னிடம் கொடுத்தார். பி.வா.சா.ஆ.6 மற்றும் 14 ஆவணங்களை நான் நகல் போட்டு வாங்கினேனா என்றால், ஞாபகமில்லை. அசல் வழக்கு எண் 125/2008 வழக்கின் வாதிகளுக்கும், இந்த வழக்கிற்கும் சம்பந்தம் உள்ளது. எப்படி சம்மதம் உள்ளது என்றால், தற்போது சாட்சி சம்மதம் இல்லையென்று பதில் அளிக்கிறார்.

9) பி.வா.சா.ஆ.14 ஆவணத்தை இவ்வழக்கில் சான்றாவணமாக குறியீடு செய்யவேண்டிய அவசியம் என்னவென்றால், மேற்படி வினாவிற்கு சாட்சி பதில் அளிக்காமல் மௌனமாக இருந்தார். வாதி நல்லமுத்து பெயரில் அவதூறான எண்ணத்தை ஏற்படுத்தவேண்டும் என்பதற்காகத்தான் பி.வா.சா.ஆ.14 ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால், சரியல்ல. அசல் வழக்கு 125/2008 ஐ புறம்போக்கில் செல்லும் வண்டித்தடத்தை தடுக்கக்கூடாது என்றுதான் தாக்கல் செய்திருந்தார் என்று சொன்னால், பட்டா நிலத்தில் தடம் போடக்கூடாது என்றுதான் வழக்கு தாக்கல் செய்தார். இன்றைய தேதி வரையில் தடம் பூஸ்திதியில்தான் உள்ளது என்றால், சரிதான். இந்த வழக்கில் வாதியை பகுதியாக குறுக்கு விசாரணை செய்த

நிலையில் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி இடைநிலை மனுவை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால், சரிதான். அந்த மனு தள்ளுபடி செய்யப்பட்டது என்றால், சரிதான். வழக்கு முடியும் தருவாயில் உள்ளதால் தள்ளுபடி செய்வதாக கூறி தள்ளுபடி செய்யப்பட்டது. அந்த உத்தரவை எதிர்த்து பல்வகை மனு மாண்புமிகு சங்ககிரி சார்பு நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தேன் என்றால், அது சரியாக ஞாபகமில்லை. அதேபோல் வழக்கு சொத்துக்களை பேணுநர் (Receiver) ஒப்படைக்க வேண்டும் என்று தாக்கல் செய்தேன் என்றால், சரிதான். அந்த மனுவும் முழு விசாரணைக்கு பிறகு தள்ளுபடி செய்யப்பட்டது என்றால், ஞாபகமில்லை.

10) அதேபோல் நீதிமன்ற ஆணையரை நியமிக்க வேண்டும் என்று கோரி இடைநிலை மனு எண் 457/2008 என்ற மனுவை தாக்கல் செய்தேன் என்றால், சரிதான். அந்த மனுவும் தள்ளுபடி செய்யப்பட்டது என்றால், அதுபற்றி ஞாபகமில்லை. 2, 3 பிரதிவாதிகளை எனது தரப்பு சாட்சியாக விசாரிக்க வேண்டுமென்று இடைநிலை மனு எண் 814/2018 என்ற மனுவை தாக்கல் செய்தேன் என்றால், ஞாபகமில்லை. அந்த மனுவும் முழு விசாரணைக்கு பின்னிட்டு 18.01.2019ம் தேதியில் தள்ளுபடி செய்யப்பட்டது என்று சொன்னால், அதுபற்றி ஞாபகமில்லை. இடைநிலை மனு எண் 1240/2011 என்ற மனுவை காலம்சென்ற ரத்தினம்(எ)ரத்தினசாமியின் கையொப்பம் மற்றும் கைரேகையை சேலம் இணைப்பதிவாளர்-2 அலுவலகத்திலிருந்து தருவிக்க வேண்டி தாக்கல் செய்திருந்தேன் என்று சொன்னால், சரிதான். அந்த மனுவானது 23.09.2014ல் அனுமதிக்கப்பட்டது என்றால், சரிதான். அதன் பின்னிட்டு வா.சா.ஆ.1 ஆவணத்தை கையெழுத்து பரிசோதனைக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை ஏதேனும் எடுத்தேனா என்றால், இல்லை.

11) வா.சா.ஆ.1ல் உள்ள கையொப்பம் ரத்தினசாமியின் கையொப்பம் என்பதை ஒத்துக்கொண்டதால்தான், வா.சா.ஆ.1 ஆவணத்தை கையொப்பம் பரிசோதனைக்காக அனுப்ப நடவடிக்கை எடுக்கவில்லையென்று சொன்னால், சரியல்ல. வழக்கு சொத்திற்கான பட்டா வாதி நல்லமுத்து பெயரில் 2004ம் ஆண்டிலேயே மாற்றம் செய்யப்பட்டது என்று சொன்னால், தவறுதலாக பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. மாற்றம் செய்யப்பட்ட விபரம் வழக்கு தாக்கல் செய்த பிறகு 2006ம் ஆண்டில் எனக்கு தெரிய வந்தது. பட்டா மாறுதலை ரத்து செய்ய உடனடியாக மனு தாக்கல் செய்தேனா

என்றால், தாக்கல் செய்தேன். 2007 ம் ஆண்டிலேயே மனு தாக்கல் செய்தேன். 2007 ம் ஆண்டே பட்டா மாறுதலை ரத்து செய்ய மனு தாக்கல் செய்தேன் என்பதற்கான ஆவணங்கள் ஏதேனும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேனா என்றால், இல்லை. பி.வா.சா.ஆ.41 ஆவணம்தான் வாதி பெயரில் உள்ள பட்டா மாறுதலை ரத்து செய்ய கொடுத்த மனுவாகும். மேற்படி மனுவை நான் நேரடியாகத்தான் கொடுத்தேன். மேற்படி மனுவில் நான் 2007 ம் ஆண்டிலிருந்தே பட்டா மாறுதலை ரத்து செய்ய மனு கொடுத்ததாக குறிப்பிட்டு கூறியுள்ளேனா என்றால், இல்லை.

12) பி.வா.சா.ஆ.41 ஆவணத்தின் சான்றிட்ட நகலை நான் தாக்கல் செய்யவில்லை என்றாலும், அலுவலக நகலைத்தான் தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரிதான். சான்றிட்ட நகலை பெற்று தாக்கல் செய்யாததற்கு ஏதேனும் காரணம் உள்ளதா என்றால், இல்லை. பி.வா.சா.ஆ.41 ஆவணத்தில் மனு எந்த தேதியில் தயார் செய்யப்பட்டது என்றோ, எந்த தேதியில் கொடுக்கப்பட்டது என்றோ குறிப்பிடப்படவில்லை என்றால், சரிதான். பி.வா.சா.ஆ.41 ஆவணமே மோசடியானது என்பதால்தான், அதில் தேதி குறிப்பிடவில்லை என்றாலும், அது எந்த தேதியில் கொடுக்கப்பட்டது என்பதற்கான ஆவணமும் என் தரப்பில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால், சரியல்ல. பி.வா.சா.ஆ.41 ஆவணப்படியான மனுமீதான விசாரணை எந்த தேதியில் நடந்தது என்று எனக்கு ஞாபகமில்லை. மேற்படி ஆவணத்தின் அடிப்படையில் RDO விசாரணை செய்தார், அது எந்த தேதியென்று ஞாபகமில்லை. எனது சார்பில் வழக்கு நகல் மற்றும் பழைய பட்டா ஆகியவற்றை விசாரணையின் போது கொடுத்தேன்.

13) விசாரணை சம்பந்தமாக எனக்கு அறிவிப்பு வந்தது. அந்த அறிவிப்பு நகலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால், இல்லை. RDO பிறப்பித்த உத்தரவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால், RDO உத்தரவு எதுவும் பிறப்பிக்கவில்லை, மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்தது, அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். சங்ககிரி வருவாய் கோட்டாட்சியர் இந்த வழக்கில் 2 ம் பிரதிவாதி என்றால், சரிதான். வாதி நல்லமுத்துவும் RDO விசாரணையில் கலந்து கொண்டு அவர் தரப்பு வாதங்களை கூறியிருந்தார் என்றால், சரிதான். வாதி நல்லமுத்து தாக்கல் செய்த எதிவுரையின் நகல் எனக்கு வழங்கப்பட்டது என்றால்,

அதுபற்றி எனக்கு சரியாக ஞாபகமில்லை. நான் மனு அளிக்கும்பொழுதே வழக்கு நிலுவையில் இருந்தது என்றால், சரிதான். வழக்கு உரிமையியல் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளபோது, இவ்வழக்கில் 2ம் பிரதிவாதியான சங்ககிரி வருவாய் கோட்டாட்சியரிடமே ஏன் மேல்முறையீடு செய்தேன் என்பதற்கான விளக்கத்தை எனது முதல் விசாரணையில் குறிப்பிட்டுள்ளேனா என்றால், குறிப்பிட்டுள்ளேன். அவ்வாறு எந்த விளக்கமும் முதன்மை சாட்சியத்தில் கூறவில்லை என்றாலும், வழக்கிற்காக கூறியுள்ளதாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

வாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க பி.வா.சா.2ன் குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.

<u>குறுக்கு விசாரணை முடிந்த நேரம் 02.42</u>

ஒப்பம்/பொன்னுசாமி

ஒப்பம்/திரு.ஆர்.ராதாகிருஷ்ணன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்ககிரி.